முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை: திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

2026ம் வருடம் ஏப்ரல் மாதம் 24ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.10/2026
மற்றும்
இடைநிலை மனு எண்.11/2026
இன்
இடைநிலை மனுக்கள் எண்.8/2026 & 9/2026
இன்
அசல் வழக்கு எண்.317/2008
* * * *

1. சக்கையா தேவர்
2. சந்திரா ... மனுதாரர்கள்/ மனுதாரர்கள்/2, 7 பிரதிவாதிகள்

/ எதிர்/

1) பழனியாண்டி ... 1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்மனுதாரர்/ வாதி

2) ராஜூ தேவர் (இறப்பு) ... 2ம் எதிர்மனுதாரர்/ 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி

3) பாலு என்ற பாலசுப்ரமணியன்
4) அக்கம்மாள்
5) ராஜலெட்சுமி
6) சாந்தி ... 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 3 முதல் 6 பிரதிவாதிகள்

இறுதியாக, இம்மனுக்களானது இன்று 24.04.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது, மனுதாரர்கள்/மனுதாரர்கள்/2,7ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்ட நிலையிலும், இந்நிர் இரண்டு இடைநிலை மனுக்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்கள்/மனுதாரர்கள்/2,7ம் பிரதிவாதிகள் தரப்பில் 20.04.2026 தேதியிட்ட IA எண்.8/2026 மற்றும் IA எண்.9/2026 இல் பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவை சீராய்வு செய்ய வேண்டி

U/O 47 R-1 R/W sec 114 of cpc ன் கீழ் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) <u>இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.</u>**

1.1) மனுதாரர்கள்/மனுதாரர்கள்/2,7 பிரதிவாதிகள் தரப்பில் 20.04.2026 தேதியிட்ட IA எண்.8/2026 மற்றும் IA எண்.9/2026 இல் பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவை சீராய்வு செய்ய வேண்டி இந்நிர் இடைக்கால மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) தீர்வு:-</u>**

2.1) மனுதாரர்கள்/2, 7 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1, வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி கடந்த 15.04.2026ம் தேதி IA No. 8/2026, IA No. 9/2026 என்ற இரண்டு இடைநிலை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதாகவும், மனுதாரர்களின் பரிகாரத்தை இந்நீதிமன்றம் தவறாக கருத்தில் கொண்டு மனுக்களை தள்ளுபடி செய்ததால் இந்த சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இம்மனுக்களில் காணப்பட்டுள்ளது.

2.2) மேலும், மாண்புமை உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பான

*1977 AIR 2421*

*T.Arivandandam Vs T.V Satyapal & Another*

*Dated: 14 October 1977*

*.... என்ற மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழக்கில்*

*"The learned Munsif must remember that if on a meaningful–not formal–reading of the plaint it is manifestly vexatious and meritless in the sense of not disclosing a clear right to sue, be should exercise his power under Or.VII r.11 cC.P.C taking care to see that the ground mentioned therein is fulfilled. And, if clever drafting has created the illusion of a cause of action, nip it in the bud at the firest hearing by examining the party searchingly under Order X C.P.C. An activist Judge is the answer to irresponsible law suits". என்று கூறப்பட்டுள்ளது.*

*2.3)* அதன்படி, ஒரு வழக்கு அவசியமற்ற வழக்கு என்று தெரியவரும் பட்சத்தில் முதல் விசாரணையிலேயே வழக்கை நிராகரிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் பிராது புத்திசாலித்தனமாக வடிவமைக்கப்பட்டிருந்த போதும், அதன் சங்கதிகள் மோசடியாக சித்தரிக்கப்பட்டவை என்று தெரியவரும்

நிலையில் அதனை எவ்விதத்திலும் அனுமதிக்க கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.4) இம்மனுவில், 1ம் மனுதாரர்/2ம் பிரதிவாதியுடன் சேர்ந்தே 2ம் மனுதாரர்/7ம் பிரதிவாதி இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளார். மேலும், மனுதாரர்கள் இருவருக்கும் ஆஜராகும் வழக்கறிஞரும் ஒருவரே ஆவார். இந்நிலையில், வா.சா.1, வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பளித்த நிலையில், மனுதாரர்கள் தரப்பில் கடந்த 15.04.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட IA No.8/2026, IA No.9/2026 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் சட்டவிதிகளை தவறாக பயன்படுத்தி நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் நோக்கத்தில் மனுதாரர் இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். மேலும், சீராய்வு மனுக்களின் சரியான சட்டப்படியான காரணங்கள் எதுவும் மனுக்களில் காணப்படவில்லை. மேலும் மாண்புமை உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பின் வழிகாட்டுதலை பின்பற்றியும், இம்மனுவானது அசல் வழக்கை காலம் கடத்தும்விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், இந்நீதிமன்றம் இம்மனுக்களை நிராகரித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இந்நிர் இரண்டு இடைநிலை மனுக்களானது இந்நீதிமன்றத்தால் நிராகரித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 24.04.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.24 17:54:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

<u>இணைப்பு</u>:–

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.24 17:55:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.10/2026
மற்றும்
இடைநிலை மனு எண்.11/2026
இன்
இடைநிலை மனுக்கள் எண்.8/2026 & 9/2026
இன்
அசல் வழக்கு எண்.317/2008
செவ்வை உத்தரவு
நாள் : 24.04.2026